සමාජ සවිබලගැන්වීම් හා සුබසාධන අමාත්‍යාංශය
சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு
MINISTRY OF SOCIAL EMPOWERMENT AND WELFARE

දිවිනැගුම සංවර්ධන දෙපාර්තමේන්තුව
வாழ்வின்எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்
Department of Divineguma Development

1වන අධියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල.
1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல
1st 4 th floor, Sethsiripaya ,Battaramulla

මගේ අංකය / எனது இல / My No: DDD/HO/MF/05/02/

ඔබේ අංකය / உமது இல / Your No: ..........

දිනය / திகதி / Date: 2017.01.10

**வாழ்வின் எழுச்சி வங்கிச் சுற்று நிருப இலக்கம் :- 2017/02**

சகல மாவட்ட வாழ்வின் எழுச்சிப் பணிப்பாளர்களுக்கும்

**<u>வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களின் உத்தியோகத்தர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு வழங்கல் - 2017</u>**

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் செயற்படும் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களில் கடமை புரியும் உத்தியோகத்தர்கள் இவ் வங்கி வலையமைப்பின் செயற்பாடுகளை நாளாந்தம் சிறப்பான முறையில் செயற்படுத்துவதற்கும் மற்றும் இவ்வலகினை இலாபகரமான முறையில் செயற்படுத்திச் செல்வதற்கும் ஏற்ற வகையில் வினைத்திறன் மற்றும் செயற்திறன் மிக்க சேவையினை வழங்கும் பொருட்டும் அவர்களுக்கான மாதாந்த ஊக்குவிப்பு கொடுப்பனவு ஒன்றை வழங்குவதற்கு தேவையான அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் கொடுப்பனவை வழங்குவதற்கான உரித்துடைய உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களுக்கு உரித்தான கொடுப்பனவுத் தொகை என்பன கீழ்வருமாறு அமைகின்றது.

**வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகள்**

| உத்தியோகத்தர் பதவி | உத்தியோகத்தரின் எண்ணிக்கை | உரித்துடைய தொகை (ரூபா) |
|---|---|---|
| வாழ்வின் எழுச்சி வங்கி முகாமையாளர் | 01 | 5,000 |
| வாழ்வின் எழுச்சி வங்கி உதவி முகாமையாளர் | 01 | 4,500 |
| ஏனைய வங்கிப் பணிக் குழுவினர் (ஒருவருக்கு 4000/= வீதம்) | 04 | 16,000 |

**வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கம்**

| உத்தியோகத்தர் பதவி | உத்தியோகத்தர் எண்ணிக்கை | உரித்தான தொகை (ரூபா) |
|---|---|---|
| வங்கிச் சங்க முகாமையாளர் | 01 | 3000 |
| வங்கிச் சங்க உதவி முகாமையாளர் | 01 | 2500 |
| ஏனைய பணிக்குழுவினர் (கணக்கு விடய உத்தியோகத்தர 02 நிர்வாக விடய உத்தியோகத்தர் 01 ஒருவருக்கு 2000/= வீதம்) | 03 | 6000 |

KUGAN/D

இக் கொடுப்பனவு வழங்குதல் 2017 ஜனவரி மாதத்தில் இருந்து ஆரம்பமாவதுடன் இதற்கு தேவையான நிதி வசதிகள் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களின் இருந்து ஏற்பாடு செய்யப்படல் வேண்டும். தற்போது வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி பணிக் குழுவினருக்கு வழங்கப்படுகின்ற ரூபா 1650/= முகாமையாளர் கொடுப்பனவு மற்றும் ரூபா 1500/= வங்கிப் பணிக் குழுவினருக்கான கொடுப்பனவு என்பன 2016 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் நிறுத்தப்படுகின்றது.

இக் கொடுப்பனவு 2017 ஆம் ஆண்டினுள் வங்கி உத்தியோகத்தர்களை ஊக்குவிக்கும் பொருட்டு வழங்கப்படுவதுடன் 2018 ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்தில் இருந்து வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்க பணிக் குழுவினரின் வருடாந்த செயற்திறன் மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படவுள்ளது.

எனவே வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்க பணிக்குழுவினர் நிதி முகாமைத்துவம் தொடர்பில் கூடுதலான அவதானத்தை செலுத்துவதுடன் மக்கள் நேயமுள்ள, பாராட்டத்தக்க வங்கி வலையமைப்பினை கட்டியெழுப்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வேண்டப்படுகின்றனர்.

நீல் ஹப்புஹின்ன
பணிப்பாளர் நாயகம்

**பிரதி**

1. செயலாளர், சமூகவலுவூட்டல் மற்றும் / நலனோம்புகை அமைச்சு - தகவலுக்காக
2. சகல பிரதேச செயலாளர்கட்கும் - தகவலுக்காக
3. சகல தலைமையக முகாமையாளர்கட்கும் - தகவலுக்காக
4. சகல வாழ்வின் எழுச்சி வங்கிச் சங்க முகாமையாளர்கட்கும் - உரிய நடவடிக்கைக்காக
5. சகல வாழ்வின் எழுச்சி வங்கி முகாமையாளர்கட்கும் - தகவலுக்காக

Translated By : I. Aliyar